DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, COONOOR

**Case No: STC.176/2025**
Prosecution witness **PW.1 (LW.1)**

| | | | |
|---|---|---|---|
| Name | : Subathra | Caste | : |
| Father Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |
| Time | : 11:20 a.m. to 11:40 a.m. | | |

**(Accused A1, A2 present. Respective accused counsel present)**
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 03.07.2025

03.07.2025 முதல் விசாரணை

நான் நீலகிரி மாவட்டம் குன்னூர் அதிகரட்டி கிராமம்-2 கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் 1, 2 எதிரிகளை நான் சம்பவத்தன்று பார்த்துள்ளேன்.

1) 31.01.2025ம் தேதி மதியம் சுமார் 12.30 மணியிலிருந்து 01.00 மணிக்குள்ளாக நானும் எனது உதவியாளர் கருணாகரனும் கெந்தளா, கோடேரி, மணியாபுரம் ஆகிய பகுதிகளின் வழியாக பீல்டு விசிட் செய்துகொண்டிருந்தோம். மதியம் சுமார் 01.00 மணியளவில் மணியாபுரம் அருகே வந்தபோது மணியாபுரம் பேருந்து நிறுத்தத்தில் ஒரு நோட்டீஸ் ஒட்டப்பட்டிருந்தது. அங்கு இந்து முன்னணியை சேர்ந்த ஆஜர் 1, 2 எதிரிகள் இருந்தார்கள். எதிரிகள் எந்தவித முன் அனுமதியும் பெறாமல் அரசு கட்டிடத்தில் நோட்டீஸ் ஒட்டியிருந்தார்கள்.

2) அந்த நோட்டீசில் திருப்பரங்குன்றம் மலையில் இஸ்லாமியர்கள் ஆடு வெட்டி பலியீடு செய்வதாகவும் அதுதொடர்பாக 04.02.2025 தேதி நடைபெற உள்ள போராட்டத்தில் இந்து மதத்தை சேர்ந்தவர்கள் கலந்துகொள்ள வேண்டுமென்று குறிப்பிட்டு இருபிரிவினர்களுக்கிடையே கலவரம் ஏற்படுத்தும் வகையில் நோட்டீஸ்

ஒட்டப்பட்டிருந்தது. மேலும் எதிரிகள் மேற்படி வாசகங்கள் குறிப்பிட்டு நோட்டீசை அந்த வழியாக வந்த பொதுமக்களிடமும் விநியோகம் செய்து கொண்டிருந்தார்கள். இதுதொடர்பாக அன்று மாலை சுமார் 05.00 மணியளவில் கொலக்கம்பை காவல்நிலையம் சென்று எழுத்துமூலமான புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் கண்டுள்ளது எனது கையொப்பம் தான். **(அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** என்னிடம் காட்டப்படும் நோட்டீஸ் தான் எதிரிகள் அன்றையதினம் மேற்படி பேருந்து நிறுத்தத்தில் ஒட்டியிருந்த நோட்டீஸ் ஆகும். **(அந்த நோட்டீஸ் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u> - (எதிரிகள் தரப்பில்)

1) அன்றையதினம் கொலக்கம்பை காவல்நிலையத்திற்கு மாலை 04.30 மணியிலிருந்து 05.00 மணிக்குள்ளாக சென்றிருப்பேன். மாலை 06.00 மணி வரை காவல்நிலையத்தில் இருந்தேன். புகார் மனுவினை காவல்நிலையத்தில் வைத்து எழுதினேனா என்றால் இல்லை. அதிகரட்டியிலுள்ள எனது அலுவலகத்தில் வைத்து புகார் தயாரித்து பின்பு காவல்நிலையம் சென்றேன். சம்பவமானது அன்றையதினம் மதியம் 01.00 மணிக்கு நடைபெற்றது. அதன்பின்னிட்டு எனது அலுவலகத்திற்கு மதியம் சுமார் 02.00 அல்லது 02.30 மணியளவில் சென்றேன்.

2) எனக்கு வாகன வசதி கிடையாதென்றால் சரிதான். ஆனால் அன்றையதினம் எனது உதவியாளரின் இருசக்கர வாகனத்தில் சம்பவஇடத்திற்கு சென்றிருந்தோம். சம்பவஇடத்திலிருந்து கொலக்கம்பை காவல்நியைத்திற்கு தொலைபேசி வாயிலாக தகவல் கொடுத்தேனா என்றால் இல்லை. சம்பவஇடத்தில் பொதுமக்கள் சுமார் 4 அல்லது 5 பேர் இருந்தார்கள். அவர்களை நான் விசாரித்தேனா என்றால் நான் விசாரித்தேன். பெயர் முகவரியை குறித்துக்கொண்டேனா என்றால் இல்லை. எனது புகாரில் பொதுமக்களை விசாரித்தது குறித்து நான் சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் எனது புகாரில் சம்பவத்தின்போது எனது உதவியாளர்

கருணாகரன் இருந்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். ஆனால் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன்.

3) புகார் கொடுத்த அன்று போலிசார் என்னை விசாரித்தபிறகு பின்னிட்டு விசாரிக்கவில்லை. புகார் மனுவுடன் அ.சா.ஆ.2 நோட்டீசை இணைத்து கொடுத்தேனா என்றால் இல்லை. சம்பவஇடத்தை போலிசாருக்கு நான் அடையாளம் காட்டவில்லை என்றும் அ.சா.ஆ.2 என் முன்னிலையில் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். எனது செல்போனில் புகைப்படம் எடுக்கும் வசதி உள்ளது என்றால் சரிதான். எதிரிகள் நோட்டீசை ஒட்டியதாகவோ பொதுமக்களுக்கு விநியோகம் செய்ததையோ நான் போட்டோ எடுத்தேனா என்றால் இல்லை.

4) பொதுமக்கள் யாரும் மதம் உணர்வை தூண்டும் வகையில் எதிரிக்ள் நோட்டீஸ் விநியோகித்ததாக புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். தமிழ்நாட்டில் ஆடு கோழி வெட்டுவதற்கு எந்த தடைச்சட்டமும் இல்லை என்றால் சரிதான். வழக்கு பிரச்சனை தொடர்பாக மத கலவரங்கள் ஏற்பட வாய்ப்பில்லை என்றும் பொய்யாக ஜோடிக்கப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல. பேருந்து நிறுத்தத்தில் மேற்படி அ.சா.ஆ.2 நோட்டீஸ் வெளிப்புறம் ஒட்டப்பட்டிருந்ததா அல்லது உள்புறமாக ஒட்டப்பட்டிருந்ததா என்றால் உள்புறமாக ஒட்டப்பட்டிருந்தது. நான் சொல்வதுபோல் பேருந்து நிறத்த்தின் உள்புறம் ஒட்டப்படவில்லை என்றும் அவ்வாறு ஒட்டப்பட்டிருந்தால் அதை எனது புகார் மனுவில் குறிப்பிட்டிருப்பேன் என்றால் சரியல்ல.

5) சம்பவஇடத்தில் மதியம் 02.00 மணி வரை நான் இருந்தேன். எதிரிகள் விநியோகம் செய்துகொண்டிருந்ததை தடுப்பதற்கு நான் முயற்சி செய்தேனா என்றால் விநியோகம் செய்யவேண்டாம் என்று அறிவுறுத்தினேன். நான் சொல்வதுபோல் சம்பவஇடத்தில் எதிரிகள் இல்லை என்றால் சரியல்ல. புள்ளிவிவர கணக்கிற்காக ஜோடிக்கப்பட்ட பொய்வழக்கு என்றால் சரியல்ல. அ.சா.ஆ.2 நோட்டீசில் மத உணர்வை தூண்டும் வகையில் எந்த ஒரு வாசகமும் இடம்பெறவில்லை என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> - இல்லை.

/ஒப்பம்/ R.அப்துல் சலாம்

நீதித்துறை நடுவர், குன்னூர்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, COONOOR

**Case No: STC.176/2025**
Prosecution witness **PW.2 (LW.2)**

| | | | |
|---|---|---|---|
| Name | : Tr.Karunakaran | Caste | : |
| Father Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |
| Time | : 11:40 a.m. to 11:50 a.m. | | |

**(Accused A1, A2 present. Respective accused counsel present)**
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 03.07.2025

03.07.2025 முதல் விசாரணை

நான் நீலகிரி மாவட்டம் குன்னூர் அதிகரட்டி கிராமம்-2 கிராம நிர்வாக உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1 சுபத்ரா மேற்படி கிராமத்தின் கிராம நிர்வாக அலுவலர் ஆவார். ஆஜர் 1, 2 எதிரிகளை நான் சம்பவத்தன்று பார்த்துள்ளேன்.

1) 31.01.2025ம் தேதி நானும் மேற்படி கிராம நிர்வாக அலுவலரும் எனது இருசக்கர வாகனத்தில் ரவுண்ட்சுக்காக கெந்தளா, மணியாபுரம், கோடேரி ஆகிய பகுதிகளில் சென்றிருந்தோம். மதியம் சுமார் 12.30 மணியிலிருந்து 01.00 மணிக்குள்ளாக மணியாபுரம் பஸ்நிறுத்தம் அருகே சென்றபோது ஆஜர் எதிரிகள் அங்கு பொதுமக்களுக்கு துண்டு பிரசுரம் விநியோகித்துக் கொண்டிருந்தார்கள். அதை கிராம நிர்வாக அலுவலர் வாங்கி பார்த்தார். அந்த நோட்டீசில் திருப்பரங்குன்றத்தில் சிக்கந்தர் மலையில் இஸ்லாமியர்கள் ஆடு மாடு வெட்டி அதை சமைத்து சாப்பிடுவதாகவும் அதற்கு எதிராக இந்து முன்னணி சார்பாக ஒரு தேதியில் போராட்டம் நடப்பதாகவும் அதில் பொதுமக்கள் கலந்துகொள்ள வேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டிருந்த நோட்டீசை விநியோகித்துக் கொண்டிருந்தார்கள்.

2) அதை பார்த்துவிட்டு நாங்கள் எங்களது அலுவலகத்திற்கு சென்றுவிட்டு கொலக்கம்பை காவல்நிலையம் சென்று கிராம நிர்வாக அலுவலர் புகார் கொடுத்தார். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.2 நோட்டீஸ் தான் அன்றையதினம் எதிரிகள் விநியோகித்துக் கொண்டிருந்ததாகும். வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u> - (எதிரி தரப்பில்)

1) மணியாபுரம் பஸ்நிறுத்ததில் அன்றையதினம் சுமார் 20 நிமிடங்கள் இருந்தோம். அன்றையதினம் மாலை சுமார் 04.30 மணியிலிருந்து 05.00 மணிக்குள்ளாக காவல்நிலையம் சென்றோம். சம்பவஇடத்திலிருந்து காவல்நிலையத்திற்கு செல்போன் மூலமாக தகவல் கொடுத்தோமா என்றால் இல்லை. எதிரிகள் நோட்டீஸ் விநியோகம் செய்துகொண்டிருந்தபோது அதை நாங்கள் சென்று தடுத்தோமா என்றால் வாங்கி படித்து பார்த்துவிட்டு விநியோகம் செய்யவேண்டாமென்று கூறினோம். ஆனால் தடுக்கவில்லை. அந்த நோட்டீசை காவல்நிலையத்திற்கு எடுத்து சென்றோமா என்றால் இல்லை.

2) புகாரை காவல்நிலையத்தில் வைத்து தான் எழுதினேமா என்றால் ஆம். புகாருடன் அ.சா.ஆ.2 நோட்டீசை இணைத்து கொடுத்தோமா என்றால் இல்லை. சம்பவத்தன்று விசாரித்த பிறகு வேறு எப்போதும் போலிசார் என்னை விசாரிக்கவில்லை. சம்பவஇடத்தை போலிசாருக்கு நேரில் சென்று அடையாளம் காட்டினோமா என்றால் இல்லை ஆனால் மணியாபுரம் பேருந்து நிறுத்தம் என்று கூறினோம். எதிரிகள் நோட்டீஸ் விநியோகம் செய்வது தொடர்பாக புகார் மனு எதுவும் பொதுமக்கள் கூறினார்களா என்றால் இல்லை. பொதுமக்கள் யாரும் வாய்மொழியாகக்கூட எங்களிடம் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

3) பேருந்து நிறுத்தத்தில் ஒட்டியிருந்த நோட்டீசை நாங்கள் புகைப்படம் எடுத்தோமா என்றால் இல்லை. உண்மையில் எதிரிகள் நோட்டீஸ் ஒட்டியிருந்தால்

அதை புகைப்படம் எடுத்திருப்போம் என்றால் சரியல்ல. மத உணர்வை தூண்டக்கூடிய வகையில் எந்த ஒரு வாசகமும் அந்த நோட்டீசில் இடம்பெறவில்லை என்றால் சரியல்ல. ஆடு கோழி வெட்டுவதற்கோ துண்டுபிரசுரம் விநியோகிப்பதற்கோ தமிழ்நாட்டில் தடையில்லை என்றால் சரிதான்.

4) புள்ளிவிவர கணக்கிற்காக காவல்துறை கேட்டுக்கொண்டதன்பேரில் கிராம நிர்வாக அலுவலர் கொடுத்த புகாருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> - இல்லை.

/ஒப்பம்/ R.அப்துல் சலாம்

நீதித்துறை நடுவர், குன்னூர்.